செ.வெ.எண் : 44

நாள் : 17-05-2017

**பத்திரிக்கை செய்தி**

திருநெல்வேலி மாவட்டத்தில் முதலமைச்சரின் விரிவான மருத்துவக்காப்பீடு அட்டை பெற்றுள்ள உறுப்பினர்களின் ஆதார் எண் இணைக்கும் பணி மாவட்டம் முழுவதும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அதன் தொடர்ச்சியாக, ஆதார் எண் இணைக்காமல் விடுபட்டுள்ள உறுப்பினர்களின் எண்களை இணைக்கும் வகையில், யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் நிறுவனத்தின் மாவட்ட திட்ட ஒருங்கிணைப்பாளர் மூலம், ஆதார் எண்களை இணைக்கும் பணி கிராமங்கள் தோறும் நடக்கிறது. முதற்கட்டமாக, பாளையங்கோட்டை, அம்பாசமுத்திரம், வீரகேரளம்புதூர் வட்டங்களில் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இதனை தொடர்ந்து மாவட்டத்தில் உள்ள ஏனைய அனைத்து வட்டங்களிலும் நடைபெறஉள்ளது. இம்முகாம்களை ஆதார் எண் இணைக்காமல் உள்ள மருத்துவ காப்பீடு அட்டை பெற்றவர்கள் பயன்படுத்திக் கொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

ஒம்/- மு. கருணாகரன்
மாவட்ட ஆட்சித்தலைவர்
திருநெல்வேலி.

/உண்மை நகல்/

17/5/17

மாவட்ட ஆட்சித்தலைவருக்காக
திருநெல்வேலி

வெளியீடு

செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்
திருநெல்வேலி

17/5/17